# ஆயர் மடல்.....

அன்புக்குரியவர்களே,

இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

ஒரு ஆண்டின் முடிவில் இன்னோரு ஆண்டு தொடங்கு கிறது. இந்த வாழ்க்கை முடிவுக்கு பின் நித்திய வாழ்க்கை தொடங்குகிறது.துவக்கமும், முடிவும், முடிவும், துவக்கமும் இந்த வாழ்வின் நியதி. இதை நாம் சரியாக புரிந்து கொண்டால் எதற்கும் நாம் பயப்படமாட்டோம். கிறிஸ்தவ விசுவாசிகளாகிய நாம் எப்பொழுதும் புதிய சிருஷ்டிகளே. இந்த புத்தாண்டில் புதிய வேகத்தோடு சென்றால் குறிக்கோளை எளிதாக எட்ட முடியும்.

இது வரை நடத்தின தேவன் இனிமேலும் புதிய ஆண்டின் எல்லையெங்கிலும் நம்மை, நமது விசுவாச குடும்பங்களை ஒரு திருச்சபையாக பாதுகாப்பாக வழி நடத்துவார். புத்தாண்டின் வாக்குத் தத்தங்களை விசுவாசத்தோடு பற்றிக் கொண்டு, புதிய பெலத்தோடு, உற்சாகத்தோடு, புதிய வேகத்தை பெற்றுக்கொள் வோம். புதிய வேகத்தை தொடர்ந்து தக்க வைத்துகொள்வோம், அடிக்கடி அந்த புதிய வேகத்தை ஜெபத்திலும், வேத தியானத்திலும், ஓய்வு நாள் ஆராதனையின் மூலமாக 2018 ஆண்டின் இறுதி வரை புதிப்பித்துக் கொன்டேயிருப்போம்.

இவ்வாறு புதிப்பித்து கொன்டேயிருந்தால் இந்த திருச்சபை மக்களாகிய நாம், தேவன் செய்யும் அற்புதங்களாக, அடையாளங்களாக இந்த நாட்டு மக்கள் மத்தியிலே இயேசுவை நாம் மூலமாக வெளிப்படுத்திக் கொன்டே இருப்போம். நமது திருச்சபையில் அன்பும், ஐக்கியமும், ஒற்றுமையும், ஒருமனம், சந்தோசம், சமாதானம், நிறைவான ஆவிக்குரிய வளர்ச்சியும் ஏற்படும். 2018 இப்படிப்பட்ட ஒரு ஆண்டாக கர்த்தர் நமக்கு அமைத்துக்கொடுப்பராக .

இப்படிக்கு,
உங்கள் ஆயர்,
Rev. Christopher Rajendran.

# *Meditation* (தியானம்)

தியான வசனம் :1 பேதுரு 4 ;7 (1 Peter 4:7)

" ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதை உள்ளவர்களாக இருங்கள்",

*"Watch unto prayer".*

அன்பிற்குரியவர்களே ,

புத்தாண்டின் தீர்மானம், இந்த ஆண்டில் ஜெபம் பண்ணுவதற்கு எப்பொழுதும் ஜாக்கிரதை உள்ளவர்க்கையாக இருக்க வேண்டும். வேத வசனங்களை எப்பொழுதும் தியானிக் கிறவர்களாக இருக்க வேண்டும். ஒரு விசுவாசியின் மிக தலை சிறந்த ஒரு காரியம், மிக முக்கிய செயல் ஜெபம், வேத தியானம் .In the midst of our very busy life, we must give first and important place to Prayer and Meditation in this year. நாம் இவ்வாறு முதல் இடத்தை கொடுத்தால், தேவன் நமக்கு, நம் குடும்பங்களுக்கு தடைகளை நீக்கி பெரிய பெரிய காரியங்களை செய்ய காத்துக் கொண்டு இருக்கிறார் .

நமது வீட்டில் திடீரென்று யாராவது உறவினர்கள் வந்து விட்டால், ஜெப தியானத்திற்கு கடைசி இடம் அல்லது மறந்தே விடுவது. உண்பதற்கும், அலங்காரமாக உடுத்து வதற்கும் ,நன்றாக உறங்குவதற்கு தடையில்லை, ஆனால் ஜெபத்திற்கு நேரமில்லை. This kind of life reflects deliberate disobedience. தேவ சமூகத்தை அசட்டை செய்வதன் மூலமாக நாம் நமது குடும்பங்களுக்கு ஆசீர்வாதங்களை சேர்த்து வைக்க முடியாது .கணவன் ,மனைவி உறவில் ஒருவரையொருவர் அசட்டை செய்தால் மனக்காயங்களோடு குடும்ப உறவில் விரிசல் ஏற்படும் ,இதைப்போலத்தான் ஆவிக்குரிய வாழ்வில் நமக்கும் தேவனுக்கும் இடையே மனக்காயங்களும், உறவில் விரிசலும் ஏற்படும்.இதை நாம் உணராமல் இருக்கிறோம் .அநேக நேரங்களில் தவிர்க்கமுடியாத கஷ்டங்களும் ,தொல்லைகளும், பிரச்சனைகளும் நம்மை துரத்திக்கொண்டு

வரும்பொழுது நாம் சோர்ந்து போய் ஜெப தியானத்தை முற்றிலுமாக விட்டு விடுகிறோம் .இப்படிப்பட்ட ஒரு சமயத்தில் தான் சங்கீதக்காரன் சற்று வித்தியாசமாக சங்கீதம் 61 ல் தேவனை நோக்கி கூப்பிடுகிறான் ,ஜெபிக்கின்றான். ஏன் இருதயம் தோயும்போது ,சோர்ந்துபோகும்போது பூமியின் கடயந்திரங்களிலிருந்து தேவனே உம்மைநோக்கி கூப்பிடுகிறேன் . ஒரு கைவிடப்பட்ட நிலைமையில் ,உலகத்தின் கடைக்கோடியில் எல்லாராலும் மறக்கப்பட்ட நிலைமையில்வீழ்ந்து

கிடந்தாலும் கர்த்தாவே நான் உம்மை நோக்கி கூப்பிடுவேன் ,ஜெபம் செய்கிறேன் என்று தாவீது சொல்கிறான் .அவ்வாறு ஜெபம் பண்ணும் பொழுது எனக்கு எட்டாத உயரமான கன்மலையில் ( தேவ சமூகத்தில் ) என்னை கொண்டுபோய்விடும் ,அதுவே எனக்கு உயர்ந்த புகலிடம் ,எந்த எதிரியாலும் தொடமுடியாத மறைவிடம் என்று சொல்கிறான் .நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் கூட Luke 5: 16 ல் அவசரமான ஊழியத்தின் மத்தியிலும் அவர் தன்னை தனியே பிரித்துக்கொண்டு வனாந்திரத்தில் தனித்து ஜெபம் செய்தார்.நம்முடைய இன்றைய ஜெப தியான வாழ்க்கை சரியில்லை என்றால், இந்த புதிய ஆண்டில் ஒரு தீர்மானம் எடுப்போம்

.தேவனை அனுதினமும் ஜெபத்திலே,வேத தியானத்திலே சந்திப்போம்.நாம் தேவனை சந்திக்க அனுதின வாழ்க்கையிலே கடைசி இடம் கொடுத்தால் நாம் குடும்ப வாழ்க்கையில் சாத்தான் முதல் இடத்தை பிடித்துக்கொள்வான் .ஆதலால் 2018 ல் தேவனுக்கு முதல் இடத்தை கொடுப்போம் என்று தீர்மானம் எடுப்போம் ,கர்த்தர் நமக்கு ஒளிப்பிடத்திலுள்ள புதையலையும் ,பொக்கிசத்தையும் நமக்கு காண்பிப்பார் .

**ஆன்புடன்.**
**உங்கள் ஆயர்**
Rev. Christopher Rajendran.

# Projects for January 2018

**Congregation:** write about your NEW YEAR Resolutions and how you are going to accomplish .

**Women's Fellowship:** Discuss about how to enhance the spiritual and domestic life of your family In This New Year .

**Men's Fellowship:** the same project given to women

**Youth fellowship:** Write about the present condition of your spiritual life and how you are going to improve it in This New Year.

**Junior Church :** Imagine and draw creatively about Christ life style with HIS Parents in HIS family.

## நன்றி

நமது திருச்சபையின் மாத இதழான “மன்னா” பத்திரிகையின் இம்மாத செலவினை முழுமையாக ஏற்றுக் கொண்ட ***Mr.Rajkumar*** குடும்பத்தினருக்கு திருச்சபையின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த ஆன்மீக பத்திரிகை வழியாக வரும் எல்லா தேவ ஆசீர்வாதங்களும் இக்குடும்பத்தாருக்கு நிறைவாய் இருப்பதாக.



**“Give me a stout heart to bear my own burdens<br>Give me a willing heart to share the burden of others<br>Give me a believing heart to cast all burdens<br>Upon the lord my God”**

# *செயலரிடமிருந்து........*

**கி**றிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் அன்பான உடன் விசுவாசிகளே, இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன்.

அருமையானவர்களே, கடந்த வருடம் முழுவதும் நம்மோடு கூட இருந்து நம்மையும் நமது திருச்சபையையும் ஆசீர்வாதமாக வழி நடத்தி இந்த புதிய வருடத்தை காணச் செய்த தேவனுக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம்.

கடந்த மாதத்தில் நடைபெற்ற ஒவ்வொரு ஊழியங்களையும் தேவன் ஆசீர்வாதமாக்கி தந்தமைக்காக அவருக்கு மீண்டுமாக நன்றிகளை ஏறெடுப்போம குறிப்பாக 8-12-17 ல் நடைபெற்ற சிறுவர் நிகழ்வுகள். 15-12-17ல் நடை பெற்ற கிறிஸ்துமஸ் கீத ஆராதனை 22-12-17 ல் நடைபெற்ற கிறிஸ்துமஸ் மரவிழா மற்றும் குடும்பபாடல் ஆராதனை ஆகியவை சிறப்பாக நடைபெற உழைத்த, உதவி செய்த ஒவ்வொருவருக்கும் என் உளமார்ந்த நன்றிகள். மேலும் 9-12-17 முதல் 11-12-17 வரை நடைபெற்ற Calrol Rounds ல் கலந்து கொண்ட, அன்போடு ஏற்றுக் கொண்ட, உபசரித்த அனைவருக்கும் திருச்சபையின் சார்பில் என் நன்றிகள். இன்னும் இந்தப்பணிகளை பொறுப் பேற்று செயல் படுத்திய ஒவ்வொரு வருக்கும் என் உளமார்ந்த நன்றிகள்.

அது போன்று நமது சபையின் கிறிஸ்துமஸ் கீத ஆராதனையில் கலந்து கொண்ட மற்ற திருச்சபையின் ஒவ்வொரு போதகர்கட்கும் சபைக்குழு அங்கத்தினர்க்கும் சபையின் மக்கள் அனைவர்க்கும் கூட நமது சபையின் சார்பில் நன்றிகளை உரித்தாக்குவோம்.

***திருத்தம் :*** *கடந்த மாதம் திடப்படுத்தல் பெற்றவர்கள் பெயரில் ஏஞ்சலின் ஷோபியா விற்கு பதிலாக ஆன்லின் ஷோபியா என்று தவறுதலாக எழுதப்பட்டுள்ளதை மாற்றி ஏஞ்சலின் ஷோபியா என்று வாசிக்கவும்.*

***M. நேசமணி***

## பெண்கள் ஐக்கியச் சங்கம்

*அன்புக்குரிய தாய்மார்களே,*

**ஒ**ரு பதிய ஆண்டின் துவக்கத்தில் இருக்கிற நாம், நமது விசுவாசக் குடும்பத்ததை தேவனோடு இணைந்து, நமது கணவனோடு, பிள்ளைகளோடு இசைந்து கட்டி யெழுப்ப தீர்மானம் எடுப்போம். கணவனுக்கும் பிள்ளை களுக்கும் நாம் இசைந்து கொடுப்பதில், இந்த புதிய ஆண்டில் ஒருபடி கீழிறங்கி அன்போடும், சகிப்புத்தன்மை யோடும் விட்டுக் கொடுப்போம். ஒவ்வொரு ஆண்டும் நம்மை சிறிது தாழ்த்துவோம். நாம் தான் விட்டுக் கொடுக்க வேண்டும். குடும்ப பாரங்களை ஜெபமாக தேவ சமூகத்தில் அனுதினமும் இறக்கி வைப்போம். கர்த்தர் இந்த பதிய ஆண்டில் நம் குடும்பங்களை ஆசீர்வதிப்பாராக.

உங்கள் ஆயரம்மா

*Mrs. Angel C.R.*

## நம் இருதயமே நம்மை காணும்!!!

**உ**லகத்தில் மிகப்பெரிய போதகர் யார் தெரியுமா? ஒரு வேளை நாம் ஒரு பெரிய பட்டியலே போடலாம். ஆனால் உண்மையில் யார் தெரியுமா? நம் இருதயமே. நாம் தவறாமல் கர்த்தருடைய ஆலயத்திற்குச் சென்று கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டும் அதைத் தள்ளலாம் அல்லது நம் உயிர் நண்பர்களின் ஆலோசனைகளை மறுக்கலாம். ஆனால் நம் இருதயத்திலிருந்து வரும் குரலை ஒருக்காலும் நாம் தள்ளவோ மறுக்கவோ முடியாது.

சில வருடங்களுக்கு முன்னால் இரு சகோதரர்கள் ஒரு பல்சுவை அங்காடியை நடத்தி வந்தார்கள். அதில் அடிக்கடி

சிறு சிறு பொருட்கள் காணாமல போயின. அவை விற்கப்படவில்லை என்பது அவர்கட்கு நன்றாகவே தெரியும். இதை எப்படி கண்டு பிடிப்பது என்று யோசித்து அந்த கடையின் மேற் கூரையில் ஒரு ஓட்டையை ஏற்படுத்தி அருவரில் ஒருவர் அங்கு அமர்ந்து அங்கு வரும் வாடிக்கையாளர்களை கவனிக்க ஆரம்பித்தனர். அப்போது அங்கு வரும் ஒரு சில வாடிக்கையாளர்கள் பொருட்களை திருட்டுத்தனமாக எடுப்பதை கண்டனர். ஆனால் அவர்கள் மேல் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் ஒரு பலகையில் "இந்த கடையின் பொருட்கள் மேற் கூரையின் ஓட்டை வழியாக கண்காணிக்கப்பட்டு வருகிறது" என்று எழுதி வைத்தனர். அன்றிலிருந்து அந்தக் கடையில் திருட்டு போவது நின்றது. ஆனால் அந்தக் கடைக்கு வருபவர்களில் ஒரு சிலர் தங்களையும் மீறி (இருதயம் உறுத்துவதால்) மேலே கூரையை நோக்கிப் பார்க்க ஆரம்பித்தனர்.


இந்த உலகத்தில் நம் இருதயத்தை விட வேறு எதுவும் வேறு யாரும் நாம் கர்த்தரிடம் சரியான உறவில் இருக்கிறோமா என்பதை சரியாக சொல்ல முடியாது. நம் இருதயமே நம்மைப் பற்றிய எல்லாவற்றையும் அறியும். ஆகையால் நம் இருதயம் கடினப்பட்டுப் போகாதபடிக்கு கர்த்தரிடத்தில் சரியான உறவில் வைத்துக்கொள்வோம்.

ஆகவே "பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மை குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனி டத்தில் தைரியங்கொண்டிருந்து, அவருடைய கற்பனை களை நாம் கைக்கொண்டு அவருக்கு பிரியமான வைகளை செய்கிற படியினால் நாம் வேண்டிக் கொள்வதெதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்ளுகிறோம்." 1 யோவான் 3:21-22.

ஆம் அன்பானவர்களே! இந்த புதிய வருடம் நம் ஒவ்வொருவருக்கும் இப்பேர்பட்ட அனுபவம் கிறிஸ்துவின் வழியாய் கிடைக்க ஜெபத்தோடு கூட காத்திருப்போம்.

***M.Nesamony***

## CHILDREN'S PLACE




# The gallon of milk

**A** young man had been to Wed. night Bible Study. The pastor had shared about listening to God and obeying the Lord's voice. The young man couldn't help but wonder, "Does God still speak to people?" After service, he went out with some friends for coffee and pie and they discussed the message. Several different ones talked about how God had led them in different ways. It was about ten o'clock when the young man started driving home.

Sitting in his car, he just began to pray, "God...If you still speak to people speak to me. I will listen. I will do my best to obey." As he drove down the main street of his town, he had the strangest thought to stop and buy a gallon of milk. He shook his head and said out loud, "God is that you?" He didn't get a reply and started on toward home. But again, the thought, buy a gallon of milk. The young man thought about Samuel and how he didn't recognize the voice of God, and how little Samuel ran to Eli.

"Okay, God, in case that is you, I will buy the milk." It didn't seem like too hard a test of obedience.

He could always use the milk. He stopped and purchased the gallon of milk and started off toward home. As he passed Seventh Street, he again felt the urge, "Turn down that street." This is crazy he thought and drove on past the intersection. Again, he felt that he should turn down Seventh Street. At the next intersection, he turned back and headed down Seventh. Half jokingly, he said out loud, "Okay, God, I will."

He drove several blocks, when suddenly, he felt like he should stop. He pulled over to the curb and looked round. He was in a semi commercial area of town. It wasn't the best but it wasn't the worst of neighborhoods either. The businesses were closed and most of the houses looked dark like the people were already in bed. Again, he sensed something, "Go and give the milk to the people in the house across the street." The young man looked at the house. It was dark and it looked like the people were either gone or they were already asleep. He started to open the door and then sat back in the car seat. "Lord, this is insane. Those people are in bed and asleep, and if I wake them up, they are going to be mad and I will look stupid." Again, he felt like he should go and give the milk. Finally, he opened the door. "Okay God, if this is you, I will go to the door and I will give them the milk. If you want me to look like a crazy person, okay. I want to be obedient. I guess that will count for something, but if they don't answer right away, I am out of here. He walked across the street and rang the bell. He could hear some noise inside. A man's voice yelled out, "Who is it? What do you want?" Then the door opened before the young man could get away. The man was standing there in his jeans and t-shirt. He looked like he just got out of bed. He had a strange look on his face and he didn't seem too happy to have some stranger standing on his doorstep. "What is it?"

The young man thrust out the gallon of milk. "Here I brought this to you." The man took the milk and rushed down a hallway, speaking loudly in Spanish. Then from down the hall came a woman carrying the milk toward the kitchen, the man following her, holding a baby. The baby was crying. The man had tears streaming down his face. The man began speaking and half-crying, "We were just praying. We had some big bills this month and we ran out of money. We didn't have any milk for our baby. I was just praying and asking God to show me how to get some

milk." His wife in the kitchen yelled out, "I asked him to send an Angel with some. Are you an Angel?" The young man reached into his wallet and pulled out all the money he had on him and put in the man's hand. He turned and walked back toward his car and the tears were streaming down his face.

He knew that God still answers prayers.

**Hear my prayer, O LORD, give ear to my supplications:**
**in thy faithfulness answer me, and in thy righteousness.**
**Ps. 143: 1**

# New Year's Prayer

"Heavenly Father, for this coming year
Just one request I bring.
I do not pray for happiness or any earthly thing.
I do not ask to understand the way you lead me;
But this I ask—teach me to do the thing that pleases You.
I want to know Your guiding voice,
To walk with you each day.
Heavenly Father,
Make me swift to hear and ready to obey;
And thus the year I now begin
A happy year will be,
If I am seeking just to do
The thing that pleases You." Amen.



## Children show your talent




## A CHRISTMAS MIRACLE

Once upon a time, there was a little girl named Sara. Every Christmas she had a special dreams but this one was the best! She dreamt that she could write to Santa Clause! So, every Christmas she used to write to Santa to help the poor instead of her gifts. Like that she helped in cultivating the town slowly to cultivate the country and then the world

itself! How she wished that the dream could come true. She tried to write a letter and posted it in the post box. But somehow she doubted it is true because she knew there was no address she had just written "to dear Santa". The next day, she received a letter from Santa Clause himself! She first thought it was some kind of joke that has been played by some prankster but when she opened it she was surprised. It said:-

Dear Sara,

We are very much indeed pleased by your letter. So we will grant you a boon that every year you can write a letter regarding your wishes. We won't object if it is for your benefit or the others.

Yours,

SANTA

She could not believe her eyes. She read the letter over and over again and then she was convinced that it was not a prank. Every year on Christmas she made thousands of people happy with the help of her boon.

One week before Christmas she broke her arm. The doctor said that it was critical and that she could not use her fractured hand for any work! This was indeed a bad news. She would miss her letter this year!

On the day of Christmas she cried in her room, she thought

*she could make others happier this Christmas. There was another choice though but she did not want to use it. The option was that she could make others write the letter only if the letter was a wish for Sara herself only. But if it was the sake of others then Sara could not make others write it for her.*

*Suddenly a fairy appeared in front of her and said "dear Sara you are so kind in this vicious world. You don't want to use the boon for yourself. You would rather use the boon for others than yourself. So we have decided to give you a lifetime boon which means you can make a wish a last wish which will last your entire lifetime and when you pass away then the boon will go away too. Make the wish my girl"*

*"My wish is that I want each and every person on earth to have a very good Christmas every year"*

*"You are very kind, my girl. You are ready to help this vicious world. But if it is what you want then let it be granted. Bye Sara, I hope you prosper in life."*

*With this she disappeared in a flash. Sara left a sigh of relief. She lived happily ever after with a smile always present in her life.*

"For God so loved the world that he gave his one and only Son, that whoever believes in him shall not perish but have eternal life," John 3: 16

***Diniya Sunshine***



## CHILDRENS' QUIZ FOR THE MONTH

## THE GOSPEL ACCORDING TO LUKE (CHAPTERS 6 TO 10)

**1. Who are apostles?**

a) Scribes
b) Pharisees
c) Disciples of Jesus
d) David and his men

**2. According to Jesus- Kingdom of God Belongs to whom?**

a) Poor
b) Rich
c) Educated
d) Kings

**3. John the Baptist was names as ___________ by Pharisees.**

a) Son of man
b) Demon
c) Glutton
d) Wine bibber

**4. A sinner woman is saved by Jesus at Pharisee's house. Jesus said "Your _____________ has saved you. Go in Peace."**

a) Alabaster flask of fragrant oil
b) Tears
c) Kiss at my feet
d) Faith

**5. In the parable of seed sowing, seed means what?**

a) Word of God
b) A good deed
c) Seed of wheat
d) Mustard seed

6. **What will be your relationship with Jesus," if you hear the word of God and do it"?**

a) Disciples
b) Mother
c) Brother
d) (b) and (c)

7. **What is the work given to disciples?**

a) To preach the Kingdom of God
b) To heal the sick
c) To fight against Satan
d) (a)and (b)

8. **What was God's instruction at the mountain of transfiguration after confirming Jesus as His son?**

a) Hear Him
b) Carry His cross
c) Be Happy always
d) Help Him

9. **What is the parable Jesus used about sending His disciples into Public?**

a) Fish into Ocean.
b) Wolves among lambs
c) Lambs among wolves
d) None of the above

10. **In the parable of Good Samaritan what was the reaction of "Priest" when he saw the injured man?**

a) Preached him about Jesus
b) Asked Samaritan for help
c) Came and looked and passed by on the other side
d) He had compassion.

N.B: Dear Children, please indicate the chapter and verses against your answers and forward to before $20^{th}$ of January 2018. Wish you all the best.

**December Answers:**

1. b) John
2. b) Mary
3. d) Shepherds living out in the fields
4. a) Simeon
5. c) Both (a) and (b)
6. d) About 30 Years
7. d) All of the above
8. b) Prophet
9. c) Forsook all and followed Jesus
10. a) Son of Man

## *Children who answered correctly:*

1. Annlin Sophia Nelson
2. Angelin Sophia Nelson
3. Dennis Roger
4. Johan Sanjo
5. Jesvin Bose
6. Diniya Sunshine
7. Mervin Samuel

## *Missed name in last month's list*

*R. Diniya Sunshine*



***சென்ற வார தொடர்ச்சி.........***

# வார்த்தை மாம்சமானது

**'பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்'** ***( எசே; 18;4).*** இது வேதாகமத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

*எசே 18:4 இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்; தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது; பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்.*

ஒரு மிருகமோ, அல்லது தேவ தூதனோ மனிதனுக்கு பதிலாக பாவத்தின் தண்டனையை அனுபவிக்க முடியாது. மனிதனுடைய திரித்துவ சுபாவம் பாவம் செய்தது, எனவே அந்த மனிதனே சாக வேண்டும்; ஒரு மனிதனே மனிதனுக்காக பிராயச்சித்தம் செய்ய முடியும் ***( லேவி** 17:11; **எபி** 9:22 ).* ஆனால், மொத்த மனுக்குலமும் பாவத்தில் இருப்பதால், எந்த ஒரு மனிதனுடைய மரணமும், அவனுக்காகவோ, மற்றவர் களுக்காகவோ, பிராயச்சித்தம் செய்ய முடியாது ***(ரோமர்** 3:10,23 ).* மனிதன் தன் பாவத்துக்காக, சுய பிராயச்சித்தமும் செய்ய முடியாது.

*எரே 13:23 எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக்கூடுமோ? கூடுமானால், தீமைசெய்யப் பழகின நீங்களும் நன்மைசெய்யக்கூடும்.*

ஆகவே மனுக்குலத்தின் பாவத்துக்கு மரிப்பதென்றால், "மொத்த மனுக்குலத்தையும் தன்னுள் கொண்டிருக்கிற" ஆதாம் தான் மரிக்க வேண்டும். ஆனால் ஆதாம் பாவத்துக்கு மரித்தால் மொத்த மனுக்குலமும் அவனோடு அழிந்து போகும். அதனால் தேவனுக்கு ஒரு பிரயோஜனமும் இல்லை. இப்போது தேவனுக்கு இருக்கிற ஒரே வழி "மொத்த மனுக்குலத்தையும் தன்னுள் கொண்டிருக்கிற" மற்றோருவர் மனுக்குலத்தின் பிராயச்சித்த பலியாக மரிக்க வேண்டும் *( **லேவி** 17:11: **எபி** 9:22; 1 **யோவான்** 2:2 ).* அப்படி மொத்த மனுக்குலத்தையும் தன்னுள் கொண்டிருக்கிறவர் இயேசு கிறிஸ்து மாத்திரமே.

கீழ்க்கண்ட வேத வசனங்கள் மூலமாக இதை நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

*யோவான் 1: 3 சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலே யல்லாமல உண்டாகவில்லை.*

*கொலோ 2: 9 ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது.*

*யோவான் 1:10 அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை.*

***கொலோ 1:15*** *அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்.*
*16 ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களா னாலும், கர்த்தத்துவங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.*

*17 அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.*

*18 அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.*

*19 சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும்,*

*1 கொரி 8:6 பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டா யிருக்கிறோம். இயேசுகிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும்*

*நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது, அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்.*

*எபே 3:11 இயேசுகிறிஸ்துவைக் கொண்டு எல்லா வற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.*

**நாம் எப்படி இயேசு கிறிஸ்துவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டோம் ?**

தேவன் நம்மை இயேசு கிறிஸ்துவுக்குள் சிருஷ்டித்தார். இது நமது முயற்சியால் அல்லது விசுவாசத்தால் சம்பவிப்பது இல்லை. தேவன் தனது கிருபையால் செய்தது.

*1 கொரி 1:30 அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக் குட்பட்டி ருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டத்தக்கதாக,*

*எபே 2:10 ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக் கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.*

**இயேசு கிறிஸ்து – “பிந்தின ஆதாம்” “இரண்டாம் மனுஷன்”**

மொத்த மனுக்குலத்தையும் தன்னுள் கொண்டிருப்பதால்தான் இயேசு கிறிஸ்து “பிந்தின ஆதாம்” என்றும் “இரண்டாம் மனுஷன்” என்றும் அழைக்கப்படுகிறார்.

*1 கொரி 15:45 அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்து மாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார்.*

*46 ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தின தல்ல, ஜென்மசரீரமே முந்தினது; ஆவிக்குரிய சரீரம் பிந்தினது.*

*47 முந்தினமனுஷன் பூமியிலிருந் துண்டான மண்ணான வன், இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர்.*

மொத்த மனுக்குலத்துக் குமான பிராயச்சித்த பலியாக மரிக்கும்படியாக, மொத்த மனுக்குலத்தையும் தனக்குள் கொண்டிருக்கிற இயேசு கிறிஸ்துவாகிய வார்த்தை, மனிதனானார் – மாம்சமானார். அதாவது மனிதனானார

**ஆதாமுக்கும் இயேசு கிறிஸ்துவுக்கும் உள்ள வேறுபாடு**

| ஆதாம் | இயேசு கிறிஸ்து |
|---|---|
| 1. முந்தின (முதலாம்) ஆதாம். | பிந்தின ( கடைசி ) ஆதாம். |
| 2. ஜீவாத்துமா. | உயிர்ப்பிக்கிற ஆவி. |
| 3. ஜென்ம சரீரம். | ஆவிக்குரிய சரீரம். |
| 4. மண்ணானவன் | கர்த்தர். |
| 5. பூமியிலிருந்து உண்டானவன். | வானத்திலிருந்து வந்தவர். |
| 6. மனிதன். | மனிதன்,கர்த்தர். |
| 7. முந்தின மனுஷன். | இரண்டாம் மனுஷன். |


**முந்தின மனுஷன், முந்தின ஆதாம்** ( First Adam, First man ) - **ஆதாம்**
**இரண்டாம் மனுஷன், பிந்தின ஆதாம்** ( Last Adam, Second man ) – **இயேசு கிறிஸ்து.**

முன்பு எப்படி மாம்சமான ஆதாமினால் மனுக்குலம் முழுவதும் பாவிகள் ஆக்கப் பட்டார்களோ, அவ்வாறே, மாம்சமான வார்த்தையினால் மனுக்குலம் முழுவதும் நீதிமான்கள் ஆக்கப்பட முடியும். சகல சிருஷ்டிகளுக்கும் பிதாவான இயேசு கிறிஸ்து இப்போது மாம்சமான மனிதனாக ஆனார். மனித சுபாவத்தை, தன்மையை எடுத்துக்கொண்டார். ஆகவே அவரால் இப்போது மனுக்குலத்துக்கான தண்டனையை ஏற்றுக்கொள்ள முடியும், மனுக்குலத்துக்காக பிராயச்சித்த பலியாக மரிக்க முடியும், ஒரு புதிய மறுபடியும் பிறந்த சந்ததியை உருவாக்க முடியும். இதற்காகத்தான் வார்த்தை மாம்சமானார்.

தொடரும்…….

## BIRTHDAY CELEBERANTS- Jan 2018

| | | |
|---|---|---|
| 02-01-2018 | Miss. Joshika Vasrhni | 050 924 9930 |
| 04-01-2018 | Miss. Rishita Kannan | 050 4821006 |
| 08-01-2018 | Master. Roshan Ravindra | 056 885 2900 |
| 12-01-2018 | Master. Geovin George | 050 290 0809 |
| 16-01-2018 | Master. Abinesh Solomon | 055 676 3719 |
| 18-01-2018 | Mr.John Joseph | 050 245 5266 |
| 19-01-2018 | Master. D.L. Derrik | 050 543 2630 |
| 20-01-2018 | Master. Abishek Solomon | 055 676 3719 |
| 27-01-2018 | Master. Jonathan Asher | 050 586 8173 |





## WEDDING ANNIVERSARIES -Jan 2018

| | | |
|---|---|---|
| 05-01-2018 | Mr.Jayan Dharmaraj<br>Mrs.Helen Hema Bai | 055 249 8186 |
| 11-01-2018 | Mr. Belfer John Sigamony<br>Mrs. Jeyantha Belfer | 055 730 9275 |
| 21-01-2018 | Mr.C.Havin Heba<br>Mrs. Jackulin Milka | 055 374 0685 |
| 23-01-2018 | Mr. David Johnson Premkumar<br>Mrs. Prema Ruth | 050 850 7652 |
| 30-01-2018 | Mr. Sathish Kumar.T<br>Mrs. Sinduja | 055 814 6143 |

*On your wedding anniversary, this is what we, the Church want to give, Wishes for you two, forever you live!!!*
*Happy wedding anniversary!!!*

************

### வேத வினா விடைப் போட்டி – ஜனுவரி 2018
(சங்கீதம் 91 முதல் 108 முடிய)

1. மகிழ்ச்சி யாருக்காக விதைக்கப்பட்டிருக்கிறது.?
2. கன்மலைகள் எவற்றிற்கு அடைக்கலமாயிருக்கிறது?
3. ஜனங்கள் விசனப்படுத்தினதினாலே, தன் உதடுகளினால் பதறிப்பேசினது யார்?
4. வயோதிபத்திலும் செழிப்பாயிருப்பவர்கள் யார்?
5. யூதாவை ஆசிரியர் எதனோடு ஒப்பிடுகிறார்?
6. தன் மூப்பர்களை ஞானிகளாக்கியது யார்?

7. சஞ்சலப்படுகிறவனின் சங்கீதம் யாது?
8. கர்த்தருடைய சாட்சிப்பிரமாணங்களையும் அவர் தந்த கட்டளையையும் கைக்கொண்டவர்கள் யார்? யார்?
9. இவ்வுலகம் அசையாது நிற்க காரணமென்ன?
10. கர்த்தரின் நீதி யார் மேல் உள்ளது?

குறிப்பு: விடைகளுக்குரிய அதிகாரமும் வசனமும் குறிப்பிட்டு இம்மாதம் 20 ம் தேதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

**டிசம்பர் மாத விடைகள்:**

1. அகந்தை (13:10)
2. கர்த்தரின் வாய் (2:6)
3. மரணகண்ணிகளிலிருந்து (14:27)
4. விவேகி (1:5)
5. புத்திமான் (10:19)
6. சகோதரி இனத்தாள் (7:5)
7. ஜீவ விருட்சம் (11:30)
8. எறும்பு (6:6)
9. பொறாமை(14:30)
10. ஆரோக்கியமுள்ள நாவு (15:4)

கடந்த மாத வேத வினா விடைப் போட்டியில் சரியான விடைகள் எழுதியவர்கள்

1. திருமதி. பிப்லின் நெல்சன்
2. திருமதி. ஜெயின் ராஜவேல்
3. திருமதி. ஜெயந்தா ஜாண்
4. திருமதி. எபென் A..பிரசாத்.
5. திருமதி. சிந்துஜா சதீஷ்குமார்

# சிறுமை

குழந்தையில்லாத அன்னாள் தன் சக்களத்தியால் நிந்திக்கப்பட்டாள், மிகவும் அவமானப்படுத்தபட்டாள், அவள் பரியாசம் பண்ணப்பட்டாள், அவள் அழுது புலம்பினாள். அவளது கணவன் அவளை தேற்றினான் ஆனால் அவள் ஆலயத்திலே தேவ சமூகத்தில் போய் கதறி அழுதாள். அங்கிருந்த ஆசாரியன் அவள் குடித்திருப்பதாக எண்ணி கொண்டு அவளை கடிந்து கொண்டான். என்ன ஒரு மோசமான நிலைமை. அவள் தேவனை நோக்கி தேவனே உம்முடைய அடியாளின் சிறுமையை கண்ணோக்கி பார்த்து உம்முடைய அடியாளை மறவாமல் நினைத்தருளி உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையை கொடுத்தால் அவன் உயிரோடு இருக்கும் சகல நாளும் நான் அவனை கர்த்தருக்கு ஒப்பு கொடுப்பேன் என்றாள். என்ன ஒரு சுய நலமில்லாத ஜெபம். நம்முடைய ஜெபங்கள் கேட்கப்படாததற்கு நம்முடைய சுய நலமான ஜெபங்களே காரணமாக இருக்கிறது. அப்போஸ்தலனாகிய யாக்கோபு 4 அதிகாரம் 3ம் வசனத்திலே இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியால் பெற்று கொள்ளாமல் இருக்கிறீர்கள் என்கிறார். பிரியமானவர்களே இந்த கடைசி காலத்தில் நம்முடைய விண்ணப்பங்கள் தேவ ராஜ்யத்திற்க்கு அடுத்தவையாக இருக்க வேண்டும்.

அன்னாளின் ஜெபம் கேட்கப்பட்டு அவளுக்கு பிறந்த சாமுவேலை கர்த்தருக்கு அற்பணித்தாள். அவள் சொன்னாள் அவன் கர்த்தருக்கென்று கேட்கப்பட்ட படியினால் அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனை கர்த்தருக்கு ஒப்பு கொடுக்கிறேன் என்றாள். தேவன் சாமுவேலோடு பேசினார் அவன் ராஜாக்களை ஏற்படுத்தினான் இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவனுடைய வாயாக இருந்தான். அவனை பார்த்து ராஜாக்கள் பயந்தார்கள் அன்னாளின் வாழ்க்கையில் ஒரு நிந்தை ஒரு சிறுமை அனுமதிக்கப்பட்டதால் அவள் தேவ சமூகத்தில் கதறி அழுது வாக்குதத்ததை பெற்று கொண்டாள். அவளுக்கு கர்த்தர் கொடுத்த வாக்குதத்தின் மூலம் ராஜாக்கள் உருவாக்கப்பட்டு ராஜ்யங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. பிரியமானவர்களே உங்கள் வாழ்க்கையில் நீங்கள் ஏதாவது காரியத்தில் சிறுமைபடுத்தபடுகிறீர்களா? உங்களை பரியாசம் பண்ணுகிறார்களா? நீங்கள் தேவ சமூகத்தில் கதறி அழுது வாக்குதத்தத்தை பெற்று கொள்ளுங்கள். ஒரு வேளை ஒரு பெரிய காரியம் உங்கள் வாழ்க்கையில் நிறைவேற இந்த சிறுமை தேவனால் அனுமதிக்கபட்டிருக்கலாம். ஒரு வேளை அன்றைக்கு அந்த சிறுமை அனுமதிக்கபடவில்லையென்றால் அவள் போக்கில் அவள் வாழ்ந்திருப்பாள் தேவனிடம் இருந்து வாக்குதத்ததை பெற்றிருக்கமாட்டாள். தேவ சமூகத்துக்கு சென்றிருக்கமாட்டாள். இன்றைக்கு பிறரால் நீங்கள் சிறுமைப்படுத்த படுகிறீர்களா? பரியாசம் பண்ணபடுகிறீர்களா? ரோமர் 8:28 “அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.” என்ற வசனத்தின் படி சகலமும் நன்மையாக மாறும்படி தேவ சமூகத்தில் தரித்திருங்கள் அல்லேலூயா.

# DAILY BIBLE READING - January – 2018

## "Your word is a lamp to my feet and light for my path"

| Date | Day | Morning | Evening |
|---|---|---|---|
| 1 | Mon | Mathew 1 | Genesis 1 |
| 2 | Tue | Mathew 2 | Genesis 2 |
| 3 | Wed | Mathew 3 | Genesis 3 |
| 4 | Thu | Mathew 4 | Genesis 4 |
| 5 | Fri | Mathew 5 | Genesis 5 |
| 6 | Sat | Mathew 6 | Genesis 6 |
| 7 | Sun | Mathew 7 | Genesis 7 |
| 8 | Mon | Mathew 8 | Genesis 8 |
| 9 | Tue | Mathew 9 | Genesis 9 - 10 |
| 10 | Wed | Mathew 10 | Genesis 11 |
| 11 | Thu | Mathew 11 | Genesis 12 |
| 12 | Fri | Mathew 12 | Genesis 13 |
| 13 | Sat | Mathew 13 | Genesis 14 |
| 14 | Sun | Mathew 14 | Genesis 15 |
| 15 | Mon | Mathew 15 | Genesis 16 |
| 16 | Tue | Mathew 16 | Genesis 17 |
| 17 | Wed | Mathew 17 | Genesis 18 |
| 18 | Thu | Mathew 18 | Genesis 19 |
| 19 | Fri | Mathew 19 | Genesis 20 |
| 20 | Sat | Mathew 20 | Genesis 21 |
| 21 | Sun | Mathew 21 | Genesis 22 |
| 22 | Mon | Mathew 22 | Genesis 23 |
| 23 | Tue | Mathew 23 | Genesis 24 |
| 24 | Wed | Mathew 24 | Genesis 25 |
| 25 | Thu | Mathew 25 | Genesis 26 |
| 26 | Fri | Mathew 26 | Genesis 27 |
| 27 | Sat | Mathew 27 | Genesis 28 |
| 28 | Sun | Mathew 28 | Genesis 29 |
| 29 | Mon | Mark 1 | Genesis 30 |
| 30 | Tue | Mark 2 | Genesis 31 |
| 31 | Wed | Mark 3 | Genesis 32 |

**Worship Timings –January 2018**
**Main Worship Hall – Oasis Hospital Campus, Al Ain.**

| | | |
|---|---|---|
| First and Third Fridays | 7:00 PM | Communion Service |
| Second & Fourth Fridays | 7:00 PM | Regular Service |
| First and Third Fridays | 6.30 PM | Men's Prayer |
| Second & Fourth Fridays | 6.30 PM | Bible Study |
| Every Friday | 6.15 PM | Junior Church |

**REGULAR MINISTRIES @ PERSONAGE - Jahli**

| | | |
|---|---|---|
| First Friday | 11:00 AM | Fasting Prayer |
| Second & Fourth Fridays | 07.00 PM | Gospel Ministry ( Camp visit) |
| Third Saturday | 07.30 PM | Women's Prayer |



# ஜெபிப்போம் !!!

- புத்தாண்டை தேவன் ஆசீர்வதித்து தரும் படி
- ஆயர், திருச்சபைக்காரியக்குழு, சபை உறுப்பினர்களுக்காக
- இந்தியாவிலும் ஐக்கிய அரபுக் குடியரசிலும் நம்மை ஆளும் தலைவர்களுக்காக
- நமது தென் இந்திய திருச்சபைக்காகவும் தென் இந்திய திருச்சபையின் பிரதமபேராயர் மற்றும் அனைத்து பேராயர்கள் ஆயர்கள் ஊழியர்கள் போன்றோருக்காக
- நம் திருச்சபையின் இதர ஊழியங்களுக்காக
- ஆலயத்தின் சார்பில் நடைபெறும் எல்லா ஆராதனைகளையும் கூடுகைகளையும் தேவன் ஆசீர்வதித்திட
- புதிய அங்கத்தினர்களை தேவன் நம் சபைக்கு தருமாறு
- நம் திருச்சபையின் அங்கத்தினர் அனைவரையும் ஆண்டவர் ஆசீர்வதிக்கவும் நாம் பத்திரமாக பாதுகாக்கப்படவும்
- விசாவுக்காக, வேலைக்காக, ஊதியத்திற்காக காத்திருக்கும் மக்களுக்கு ஆண்டவர் சரியான நேரத்தில் அவைகளை வழங்கும்படியாக
- வியாதிகளுக்கு ஆளாகி சிகிட்சை பெறுபவர்களுக்காக, அவர்கள் சுகம் பெற
- நமது திருச்சபை தாங்கும் நமது மிஷனரிகளான திரு. கிறிஸ்டோபர், திரு. சூரிய பால் சதா ஆகியோருக்காகவும் அவரது குடும்பம் மற்றும் துப்புறம்பட்டு பகுதியில் அவர் செய்யும் ஊழியங்களை தேவன் ஆசீர்வதித்திடவும் ஜெபிப்போம்.